329

329.

வ்யய௵ ஆவணி ௴

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 8

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

17 AUG 1946

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

JL
இ22ணூ211.NW
N46.5.8.
189224

August, 1946
Vol. 5, No. 8

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

			பக்கம்
1.	ஸ்ரீ குலசேகரப்பெருமாள் ராமாயணம்	....	167
2.	ஸ்ரீ தேசிகனும் கண்ணனும்	....	170
3.	ஸதாசார்ய கடாக்ஷம்	...	172
4.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	....	176
5.	ஒரு ஸம்சயம்	....	177
6.	அபுநராவ்ருத்தி விசாரம்	...	178
7.	செய்திகள்	....	184
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	...	187

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா '46 ஜுபிலீ-த்துச் சந்தா வரவு

28	ஸ்ரீ. கேதாண்டிப்பட்டி நரஸிம்ஹாசாரியர், பம்பாய்	....	5	0
116	,, K. T. பார்த்தஸாரதி ஐயங்கார், வேலூர் (சேலம்)	....	5	0
144	,, R. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம்	....	3	0
251	,, N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்	...	3	0
264	,, C. R. க்ருஷ்ணமாசார்யர், கடலூர் N. T.	....	3	0
686	,, V. S. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தி. நகர்.	....	3	0
		மொத்தம் ரூ.	22	0

ஸ்ரீ:

சந்தாதாரர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

நமது ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியைக்குச் செலுத்தவேண்டிய சந்தாத் தொகையை இன்னும் செலுத்தாமலிருக்குமவர்கள், க்ருபை பண்ணி சீக்ரத்திலேயே அந்தத் தொகையைச் செலுத்தி விடும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். இது விஷயமாகத் தேவரீர்களிடமிருந்து இந்த மாஸத்திற்குள் யாதொரு பதிலும் கிடைக்கப் பெறுவிடில், அடுத்த மாஸத்து ஸஞ்சிகையைத் தேவரீர்க்கு V. P. மூலம் அனுப்புவதாக உத்தேசம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ ஸடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ குலசேகரப் பெருமாள் ராமாயணம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. ஒரகடம் கோ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை]

10. அன்றுசரா சரங்களைவை குந்தத் தேற்றி
அடலரவப் பகையேறி யசுரர் தம்மை
வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்குந் தோன்ற
விண்முழுது மெதிர்வரத்தன் தாம மேவி
சென்றினிது வீற்றிருந்த வம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
என்றுநின்ற னவனிவனென் றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ வெப்பொழுதும் தொண்டீர் நீரே.

[இப்பாட்டால், சராசரங்களை வைகுந்தத் தேற்றுதல், ஸ்ரீ ராமபிரான் அவதார ஸமாப்தி பண்ணிக்கொண்டு தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினமை முதலியன சொல்லப்படுகின்றன.]

[பதவுரை] அன்று- (ஸ்ரீ ராமபிரான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருள்கிற) அக்காலத்தில், சர அசரங்களை- (அயோத்தியிலுள்ள) ஜங்கமமும் ஸ்தாவரமுமான எல்லா உயிர்களையும், வைகுந்தத்து ஏற்றி-பரமபதத்திலே போகச் செய்து, அடல் – வலிமையையுடைய, அரவம் பகை – ஸர்ப்பங்களுக்குச் சத்ருவான பெரிய திருவடியின் மீது, ஏறி - ஏறிக் கொண்டு, அசுரர் தம்மை வென்று – அஸுர வர்க்கத்தை வெற்றிகொண்டு, இலங்கும் – (அதனாலே வீர ஸ்ரீ) விளங்கப் பெற்ற, அணி நெடுந்தோள் நான்கும் தோன்ற – அழகிய நீண்ட தன் திருக்கைகள் நான்கும் விளங்க, விண் முழுதும் – பரமபதத்தில் உள்ளார் அனைவரும், எதிர்வர - எதிர்கொண்டு உபசரிக்கும்படி, தன் தாமம் – தனது ஸ்தாநமாகிய பரமபதத்திலே, மேவி சென்று – போய்ச் சேர்ந்து, இனிது வீற்றிருந்த – இனிதாக (ஸிம்ஹாஸநத்தில் தன் பெருமை தோன்ற) எழுந்தருளியிருந்த, அம்மான் தன்னை – பெருமானை, தொண்டீர் நீர் – தொண்டரான நீங்கள், தில்லைநகர் திருச்சித்ர கூடம் தன்னுள் – தில்லைத் திருச்சித்ர கூடத்தில், என்றும் – எந்நாளும், நின்றான் அவன் – (நமக்காக) நித்யவாஸம் பண்ணுகிற அப்பெருமான், இவன் என்று – இவ்விராமபிரானே யென்று அறிந்து, ஏத்தி – (இடைவிடாது) தோத்திரம் செய்து, நாளும் – தினந்தோறும், எப்பொழுதும் – ஸதா காலமும், இறைஞ்சுமின் – ஆச்ரயித்து க்ருதார்த்தராகுங்கோள்.

[கருத்து] அக்காலத்தில் சராசரப் பொருள்களை யெல்லாம் வைகுந்தத்தில் போகவிடுத்து, அஸுரர்களை வென்ற அவ்வெற்றித் திரு விளங்கப் பெற்ற

189224

நான்கு திருக்கைகளுடன் பெரிய திருவடி மீது ஆரோஹணித்துப் பரமபதத்தி லுள்ள நித்ய ஸூரியர் யாவரும் எதிர்கொள்ளத் தன்னடிச் சோதிக்கு எழுந் தருளின ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனே தில்லைத் திருச்சித்ரகூடத்தில் நித்ய வாஸம் பண்ணுபவன் என்றறிந்து, தொண்டர்களே! அவனைப் புகழ்ந்து உஜ்ஜீவி யுங்கோள் என்று உபதேசிக்கிறார்.

ராமபிரான் சராசரங்களை வைகுந்தத் தேற்றின வரலாறு:—ஸ்ரீ ராமபிரான் லக்ஷ்மணனைப் பிரிந்த துயரத்தை ஆற்றாது ராஜ்யத்தை விட்டுச் செல்லத் தொடங் கியபோது, அயோத்தியி லுள்ளார் யாவரும் ராகவனைச் சரணமடைந்து, "ஸ்வாமீ! தேவரீர் எங்குச் சென்றாலும் எங்களையும் உடனழைத்துச் செல்லவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பிரானும் அதற் கிசைந்து ப்ரயாணப்பட, அவனுடன் அந்நகரத்து ஜனங்களே யன்றி விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்களும் அகமகிழ்ச்சியுடன் பின் சென்றன. அப்போது ராகவன் ஸரயூவில் இறங்கி அவதார ஸமாப்தி பண்ணித் தன்னடிச் சோதிக்கு எழுந்தருள, உடன் சென்ற யாவரும் ஸரயூவில் இறங்கி உயிர் துறந்தனர். அப்போது பகவான், பரமபக்தி யுடன் தம்மைத் தொடர்ந்து வந்த உயிர்களுக்கு ப்ரம்ஹ லோகத்துக்கும் மேற் பட்டதாயும், புநராவ்ருத்தி (மீண்டு வருதல்) இல்லாததுமான ஸாந்தாநிகம் என் னும் லோகத்தை அளித்து அநுக்ரஹித்தார்.

வைகுந்தம்—வைகுண்டம்; இச்சொல் அழியாதது என்று பொருள் படும். பகவான், ஸுப்ர முனிவனது மனைவியான விகுண்டை என்பவளிடத்தில் அவதாரம் செய்தமையால் வைகுண்டன் என்று திருநாமம் பெற்றன ரென்றும், வைகுண்டனது நகரம் வைகுண்டம் எனப் பெயர் பெற்ற தென்றும் கூறுவர்.

11. தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான் தன்னை
எல்லையில்சீர்த் தயரதன்தன் மகனாய்த் தோன்றிற்
றதுமுதலாத் தன்னுலகம் புக்க தீறாக்
கொல்லியலும் படைத்தானைக் கொற்ற வொள்வாள்
கோழியர்கோன் குடைக்குலசே கரன்சொற் செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணு வாரே.

[இப்பாட்டால் பதிகப் பயனென்னும் பலச்ருதி சொல்லப்படுகிறது.]

[பதவுரை] தில்லை நகர் திருசித்ரகூடந் தன்னுள்—தில்லைத் திருச்சித்ர கூடத்தில், திறல் விளங்கும்—பராக்ரமம் விளங்குகின்ற, மாருதியோடு—அனு மானுடனே, அமர்ந்தான் தன்னை—நித்யவாஸம் செய்கின்ற எம்பெருமானைக் குறித்து, எல்லை இல் சீர்—அளவில்லாத புகழையுடைய, தயரதன் தன் மகனாய்— தசரத சக்ரவர்த்தியின் குமாரனாய், தோன்றிற்று அது முதலா—பிறந்தது முதல், தன் உலகம் புக்கது ஈறா—பரமபதம் எழுந்தருளின பரியந்தம், (ஸ்ரீ ராமாயண கதை முழுவதும் ஸங்க்ரஹமாக அமைத்து), கொல் இயலும் படை—(பகைவர் களைக்) கொல்லக்கூடிய ஆயுதங்களையுடைய, தானை—சேனையையும், கொற்றம்— வெற்றியையும், ஒள் வாள்—பிரகாசம் பொருந்திய வாளாயுதத்தை உடைய

வரும், கோழியர் கோன்—உறையூரில் உள்ளார்க்குத் தலைவரும், குடை—வெண் கொற்றக் குடையை உடையவருமான, குலசேகரன் சொல் செய்த—ஸ்ரீ குலசேகராழ்வார் அருளிச் செய்த, நல் இயல்—சிறந்த இயல் தமிழ் இலக்கணத்துக்கு இசைந்த, இன் தமிழ் மாலை—இனிய தமிழ் ப்ரபந்த ரூபமான இப்பத்துப் பாடல்களையும், வல்லார்—சொல்ல வல்லவர்கள், நலம் திகழ்—பரம பதத்தில் விளங்குகின்ற, நாரணன் அடி கீழ்—ஸர்வேச்வரனுடைய திருவடிகளில், நண்ணுவார்—சேர்வார்கள்.

[கருத்து] கோழியர்கோனான குலசேகரன், தில்லை நகர்த் திருச்சித்ர கூடத்தில் ஹநுமானோடு நித்யவாஸம் பண்ணும் பெருமானை, அவன் சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தது முதல் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளின பர்யந்தம் (ஸ்ரீ ராமாயண கதை முழுவதும் ஸங்க்ரஹமாகச்) சொல்லிய இவ்வியல் தமிழ்ப் பாமாலையின் பத்துப் பாசுரமும் வல்ல பாகவதர்கள் அப்பெருமானது அடியை யடைந்து இன்புறுவர்.

[விசேட உரை] தில்லை நகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான்—"ஹாவொ நா நதீ த்ருஹூதி" என்று, அங்கு [பரமபதம்] போகேனென்ற திருவடியை விடமாட்டாமே இங்கு [திருச்சித்ரகூடம்] வந்து நித்யவாஸம் பண்ணுகின்றவனை."

மாருதி – வாயு குமாரன்; இவன் பிரமதேவன் வரத்தினால் சிரஞ்ஜீவிப் பட்டம் பெற்றவன்; ராமகதை உலகத்தில் உள்ளவளவும் தாம் ஜீவித்திருக்குமாறு ஸ்ரீ ராமனிடம் வரம் வேண்டிப் பெற்றவன். ராமபிரான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும்போது, ஹநுமான் அவனை விட்டுப் பிரியமாட்டாது சோகப்பட, ராமன் தானும் அவனை விடமாட்டாமல் அவனுடனே சித்ரகூடத்தில் வீற்றிருக்கிறான்.

எல்லையில் சீர்..........முதலா:—"வி தா ஸம்ஸொ அயாஜாவ" என்று (தசரதற்குப்) பிள்ளையாய்ப் பிறந்தது தொடக்கமாகப் பரமபதம் புக்கது முடிவாக உண்டான ராமாயண கதையை.

கோல்லியலும்..........குலசேகரன்:—கொல்லுதற்குரிய வேற்படையும் வாட்படையும் ஸேனையுமுடைய உறையூர்க்கு நிர்வாஹகரான ஸ்ரீ குலசேகராழ்வார். ஒரு ஸமயம் குலசேகரர் திக்விஜயம் செய்தபோது சோழராஜனை வென்று, அந்நாட்டுக்கும் தலைமை பூண்டதனால் இவர் கோழியர்கோன் எனப் பட்டார். கோழி—உறையூர். முற்காலத்தில் ஒரு கோழி, யானையோடு போர் புரிந்து வென்ற தலத்தில் நகர நிர்மாண மானமை பற்றி, உறையூர்க்குக் கோழி என்று பெயராயிற்று.

நல் இயல் இன் தமிழ்மாலை—எம்பெருமானும் அவனடியாரும் மேற்கொண்டு ஆதரிக்கத்தக்க நல்லியல் வாய்ந்த இனிய பூமாலை போன்ற பாமாலை.

பதிகப் பயன்—பலச்ருதி; இப்பதிகம் வல்லவர் எம்பெருமானுடைய அருளைப்பெற்றுப் பரமபதம் அடைவரென்றபடி. [முற்றும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிகனும் கண்ணனும்

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை 6, பக்கம் 143-ன் தொடர்ச்சி]

[கருடபுரம் ஸ்ரீ. உப. தி. ஈ. திருமலாசார்யர், வ்யாகரண சிரோமணி மாம்பலம்]

" [illegible] ।
[illegible] ॥"

" ஸ்தந்யம் தத்விஷஸம்மிஶ்ரம் ரம்யமாஸீஜ்ஜகத்குரோ: ।"

" [illegible]
[illegible] ॥"

[பூதனையின் விஷ மிச்ரமான ஸ்தந்யத்தைப் பரம போக்யமாக உண்பதற்கு அவளுடைய உயிரை உபதம்சமாகக் கொண்டு மறுபிறவி இல்லா திருக்கும்படி ஸ்தந்யபாந வ்யாஜத்தால் அவளது உயிரை வற்ற வாங்கி யுண்ட கதையை த்யாநிக்கிறவர்களுக்கு ஸ்தந்யபாந ப்ரஸக்தியே இல்லாமற் போய்விடுகிறது. அதாவது: மறுபிறவி யில்லாமற் போய்விடுகிறது; இது என்ன ஆச்சர்யம்!] என்று பூதநா ஸம்ஹாரத்தை ஆச்சர்யமாக அநுபவிக்கிருர்.

" [illegible] ।
[illegible] நவநீத [illegible] ॥"

[உலகமாகிற நாடகத்திற்கு ஸூத்ரதாரனை எந்த எம்பெருமான் ஜங்கம ஸ்தாவர ரூபங்களாக இருக்கும் நாடக பாத்ரங்களை ஆட்டிவைக்கிருனே, அந்த க்ருஷ்ண பகவான் ஆச்சர்யமான குண சேஷ்டிதங்களை உடையவனுய் வெண்ணெய் உண்பதற்கு நடந மாடுகிருன்] என்றும்,

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

[பக்த பராதீநனுன ஸர்வேச்வரன், தன்னைப் பக்தர்கள் 'நவநீத சோரன்' என்று அநுஸந்தித்தால், அதை அவன் செவிக்கினிய செஞ் சொல்லாய்க் கொள்கிருனென்றும், அப்படியே 'பாண்டவ தூத!' 'பார்த்தஸாரதே! என்று தன்னை ஸ்மரித்தால் அதை அவன் பெரிய பிருதாகக் கொள்கிரு னென்றும், தன்னைப் பக்தர்கள் அவ்வாறு அநுஸந்திப்பதால் மகிழ்ச்சி யுண்டாவதற்காகவே அவன் வெண்ணெய் திருடுகிரு னென்றும், அப்படி வெண்ணெய் திருடுங் காலத்தில், குடத்தில் கொஞ்சமும் இல்லாமல் வெண்ணெயைத் திருடி விட்டால் தனது திருட்டுத்தனம் வெளியாகா தென்பதைக் கொண்டே தனது 'தாரார் தடந் தோள்கள் உள்ளளவும் கைநீட்டி ஆராத வெண்ணெய்' விழுங்குகிரு னென்றும், ['நிஹிதக:' என்றில்லாமல் 'விநிஹிதக:' என்பதன் ஸ்வாரஸ்யம் இங்கு அறியத்தக்கது.] அப்போது யசோதா தேவி கர்மபந்த னில்லாத ஸர்வேச்வரனைக் கண்ணிநுண் சிறுத் தாம்பினுல் கட்டுவதற்கு வர, தாயைக் கடவுளாக நினைக்க

வேண்டு மென்று நாட்டாருக்கு வெளியிடுவதற்காகவே பயத்தைச் சிறிது காட்டி, மாத்ரு வாத்ஸல்யத்தினுல் சிறிது நெருங்கியும், பயத்தினுல் சிறிது விலகியும் விளையாடுகிருனென்றும், [(நாவமஹூநு நதிஷ்டநு) தாயினிடத்தில் பயம் தோற்றும்படி கண்களை மூடிக் கொண்டு நிற்கும் ஸ்வஸங்கல்பத்தினுல் இடை வேஷம் பூண்ட ஸர்வ ரக்ஷகன் நம்மைக் காக்க வேண்டும்] என்றும் நவநீத நர்த்தநத்தை அத்யாச்சர்யமாய் அநுபவிக்கிருர்.

"சொல்லி லரசிப்படுதி நங்காய் சூழலுடையனுன் பிள்ளைதானே
இல்லம் புகுந்தென் மகளைக்கூவிக் கையில் வளையைக் கழற்றிக் கொண்டு
கொல்லையினின்றுங் கொணர்ந்து விற்றங் கொருத்திக் கவ்வளை கொடுத்து
நல்லன நாவற்பழங்கள் கொண்டு நானல்லே னென்று சிரிக்கின்றுனே."

என்று பெரியாழ்வார் அநுபவித்ததை நம் தேசிகன்,

"ஶ்ருத்யந்தகாநாம் ப்ரஸவ: ஃலாநாமாரண்யஜாதாந்யபிலஷந்ஸ் ।
விஸ்ரம்பியாந்யஞ்ஜலிநா கரேண வ்யாதாத்மஜாம் விஶ்வபதிஸ் ஸிஷேவே ॥"

[உபநிஷத் பாகத்தில் சொல்லியிருக்கும் பலன்களுக்குக் காரணமாயும், உலகங்களுக்குக் கெல்லாம் ரக்ஷகனுமான ஸ்ரீ க்ருஷ்ணபகவான் ('காட்டிலுள்ள பழங்களுக்கெல்லாம் காரணமான' என்பது வேருரு பொருள்) காட்டிலுள்ள பழங்களை விரும்பிக் குழந்தைப் பருவத்தைக் காண்பிக்கும் தனது சிறிய கைளினுல் சிறந்த தாந்யங்களைக் கொண்டு ஒரு வேடுவப் பெண்ணை அடைகிருர்] என்று கொஞ்சம் வேறு விதமாக க்ருஷ்ணனுக்குப் பழத்திலிருக்கும் திருவுள்ளத்தை அநுபவிக்கிருர்.

"ஸ ஜாதவேதா இவ ஸூக்ஷ்மாக்ரம் தாத்ர்யா ப்ரதத்தம் தஸ்ய கராக்ரவித்தம் ।
விநோதயந்த்யா: ஸ்ம்ருதிகர்ஷிண்யா: விக்ரீததாந்யா நவஸூக்திரூபா: ॥"

"ஶ்ருண்வந்தி யஸ்ய ஸ்வாது ஹ்ருதஸ்ய க்ருஷ்ணேந
க்ரீதாம் பூர்ணஸ்தநம் க்ஷவம் கிராதீம் ।
ரத்நஸ்ய தத்தஸ்ய கருணாரஸ வ்யாப்தஶ்ரீவத்ஸ
நாவத்ஸிதம் தத்குருஹாண்டாவஸீத ॥"

[பழங்களைப் பெற்றுக்கொண்டு பகவான் தாந்யங்களை அவ்வேடுவச்சியினிடம் கொடுக்க, அப்போது அவள் பகவானுடைய அழகிய செந்தாமரை போன்ற இரு திருக்கைகளையும் பார்த்து, கௌஸ்துப ஸ்தாநீயமான தனது ஆத்மாவின் ஸமர்ப்பணமே அந்த தாந்யத்துக்கு ஈடாகுமே யல்லது, இப்பழங்கள் அதற்கு ஈடாகா என்று தன் ஆத்மாவை ஸமர்ப்பிக்கக் கருத, ஸ்ரீ க்ருஷ்ண பகவான் கௌஸ்துபத்துக் கொப்பான ஆயிரம் மடங்கு ரத்நங்களை அந்தப் பாண்டத்தில் நிறைத்துவிட்டார்] என்று அத்யத்புதமாய் அநுஸந்தித்தார்.

இப்படி ஆச்சர்யமான ரஸாநுபவங்கள் பல உண்டு. விஸ்தர பயத்தால் இதோடு நிறுத்திக்கொள்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸதாசார்ய கடாக்ஷம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள், பஸவங்குடி, பெங்களூர்]

ஸதாசார்ய கடாக்ஷம் ஒரு சேதநன்மேல் விழுந்தால் எதுதான் கிட்டாது? ஸத்துக்களை ஆச்ரயித்தால், வித்யை ஞானம் பக்தி முதலிய ஸகல ஸம்பத்துக்களும் 'நான் முன்னே நான் முன்னே' என்று வலுவில் வந்தடையும். அழுக்கற்ற கண்ணடியின் முன் நம்முடைய முகம் ப்ரதிபலிப்பதுபோல், ஆசார்ய கடாக்ஷம் நம்மேல் விழுந்தவுடன் ஞானக்கண் மலர்ந்து உண்மை ஞானம் தெளிவாய்ப் புலப்படும். இதில் என்ன ஆச்சர்யம்?

"பகுத்தறிவற்ற ஒரு பச்சைக் கிளியுங்கூட ஒருவர் பழக்கிவைத்த பாசுரங்களைச் சொல்லுகிறது. மேரு பர்வதத்தை அடுத்த கறுத்த காக்கையும் தன் இயற்கை வர்ணம் மாறி, விலை மதிப்பற்ற பொன்மயமாய் ப்ரகாசிக்கின்றது. இதிலும் அதிசயம் ஒன்றுளது. க்ஷத்ரிய வர்ணத்தில் உதித்த விச்வாமித்ரர் அந்த ஜந்மத்திலேயே க்ஷத்ரிய வர்ணம் கழிந்து வஸிஷ்ட பகவான் அநுக்ரஹத்தால் ப்ரம்ஹ ரிஷியாய் மாறித் தேஜோமயமாய் விளங்கினர். ஸதாசார்ய ஸம்பந்தம் அத்தகைய அருமையும் பெருமையும் வாய்ந்தது'' என்று அருளிச்செய்தார் நம் ஆசார்ய ரத்நம்.

இவ்வுண்மையை நான் ப்ரத்யக்ஷத்தில் கண்டேன். திருக்கோட்டியூர் ஸ்வாமி உபதேச மொழியை இதற்கு முந்தியும் எழுதியுள்ளேன். ஆசார்ய கடாக்ஷத்தினல் அவ்வ்யாஸம் சில ஸஹ்ருதுக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்ர மாகியது. ஆசார்ய கடாக்ஷம் பெற்றதைக் கண்ட பேதை மனம் பொங்கிப் பூரித்தது. அதன் உத்ஸாஹமும் ஆநந்தமும் அபரிமிதம். தன்னுள் தங்கிய அளவு ஸ்ரீஸ்வாமி அருளிய செல்வத்தை வாரி வழங்கவேணு மென்று குதூஹலம். அவைகளின் இன்சுவையைத் தன் தாஹம் தீர எண்ணிஎண்ணி, அநுபவிக்கவேணு மென்னும் ஆவல் மறுபடியும் என்னை எழுதும் வண்ணம் தூண்டுகிறது. அதி மேதாவியாகிய சிறிய திருவடிக்கும் உத்ஸாஹ மூட்ட வேண்டி இருந்தபோது அறிவிலிகளைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

கண்ணபிரான் புகழ்மாலை ஆசந்த்ரார்க்கம் உலகில் ஜீவித்திருக்குமாறு செய்தருளியவர்கள் மஹான்கள். சந்த்ர ஸூர்யர்கள், காடு மலை மேடு பள்ளம் என்னும் ஏற்றத் தாழ்வின்றிப் பாரெங்கிலும் தங்கள் ஒளி பரவுமாறு செய்கிறார்கள். அதுபோல் ஸதாசார்யர்கள் பண்டிதன் பாமரன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் பக்ஷபாத மின்றித் தங்கள் கடாக்ஷ ஒளி எங்கும் ப்ரகாசிக்கும் வண்ணம் அருள் புரிகின்றனர். சுகப்ரஹ்ம ரிஷி பரீக்ஷித் மஹாராஜனைத் தேடி வந்து க்ருஷ்ண கர்ணாம்ருதத்தைப் புகட்டினர்; ப்ரம்ஹ ஜ்ஞாநம் என்னும் ஸம்பத்தை வாரி வாரி வழங்கினர். அவ்விடம் கூடியிருந்த கோஷ்டிக்கும் அவ்வாநந்தாநுபவத்தில் அணுவளவும் குறைவில்லை. பண்டித பாமர விபாகமற எங்களுக்குக் கிடைத்த அம்ருத பாநத்திற்கும் இதுவே நிதர்சநம்.

ஒரு பெரிய பலாமரம். அடர்ந்த கிளைகள். குலுங்கும் பழங்கள். எதிரில் புதிதாய் அமைந்த சிறிய குடில். அவ்விடம் திவ்ய ஸேவை.

“[illegible]
[illegible]
[illegible]
[illegible]”

தாமரை மலரை யொக்கும் திருவடி யிணைகள்; திருவரையில் துலங்கும் தூய வஸ்த்ரம்; திருக்கரங்களில் பூஷணமாய் விளங்கும் புஸ்தகம்; திருமார்பில் விளங்கும் முப்புரிநூல்; திவ்ய உத்தரீயம்; அழகிய துளஸீ மணி தாமரை மணி மாலைகள்; பூர்ணசந்த்ரனைப் பழிக்கும் திருமுகம்; தேஜோமயமாய் விளங்கும் திருமண் காப்புக்கள்; கோடி ஸூர்யனை நிகர்க்கும் திவ்ய மங்கள விக்ரஹம். இவ்விதம் ஸ்ரீ தேசிகமணியின் அபராவதார மெனத் திகழும் ஸௌம்ய மூர்த்தியை ஸேவித்தோம். கரையற்ற இன்பவெள்ளத்தில் ஆழ்ந்தோம். அத்தேஜோ புஞ்ஜத்தைக் கண்டதும் பக்தியும் பணிவும் வலுவில் விரைந்தோடி வந்து அனைவர் உள்ளத்திலும் குடிபுகுந்தன.

கூட்டங் கலைந்தது; ஸேவார்த்திகள் அவரவர் இல்லம் சென்றனர். என் கால்கள் ஓரடி எடுத்துவைக்கவும் மறுத்தன. ஸ்வாமியின் கடாக்ஷம் ஏழையின்மேல் வீசியது. அக்கமலக் கண்களில்தான் என்ன கருணை! என்ன அன்பு! அவ்வலையில் சிக்காதவர்களும் சேதநர்களோ? அந்த க்ஷணம் மதுரமும் கம்பீரமும் பொழியும் குரல் எழுந்தது.

“பார்த்தாயா பகவத் ஸங்கல்பத்தை? திருநாராயணபுரத்தில் உங்கள் ஊருக்கு வருவதாகச் சொன்னேன். கண்ணன் உங்கள் அகத்துக்கே அழைத்துக்கொண்டு வந்து விட்டான். அவன் க்ருபா ப்ரவாஹம் எங்குப் பாய்கிறதோ எவர் அறிவர்? என்னை இவ்விடம் அழைத்து வந்த ஸ்வாமி அத்யந்தம் அன்பும் ஆதரவும் கொண்டவர். பரம ப்ரீதியுடன், மிகவும் விஸ்தாரமும் ஸகல ஸௌகர்யமும் அமைந்த இல்லம் ஒன்றை எனக்கு அமைத்து வைத்திருந்தார். ஆனால் அது தேவதாந்தர ஸம்பந்தம் பெற்றது. என்ன செய்வது? பாவம்; அவர் ச்ரமம் வீணாகியது. எல்லாம் ஸர்வேச்வரன் ஸங்கல்பம். அஸத்துக்களின் ஸஹவாஸமும் பொருளும் அநர்த்தம். ஸஜ்ஜநர்களிடம் பகவான் கொண்டு வந்துசேர்ந்தான். அவன் பட்ட மஹிஷியாகிய நம்முடைய கற்புக்கு ஒருக்காலும் பங்கம் நேரிடாமல் காப்பது அவன் பொறுப்பன்றோ? அவ்வச்சுதன் க்ருபா ப்ரவாஹம் அபாரம். அவன், தான் ஸங்கல்பத்தை நழுவவிட்டாலும் தன்னடியார்களின் வ்ரதத்தை நழுவவிட மாட்டான்; கட்டாயம் நிறை வேற்றுவான். அவ்விஷயத்தில் உதாஹரணம் மஹான் பீஷ்மாசார்யர் ஒருவர் போதாதோ?

“[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥”

[கண்ணன், தான் யுத்தத்தில் ஆயுதம் எடுப்பதில்லை என்று ப்ரதிஜ்ஞை செய்தான். நான் எடுக்கச் செய்வதாய் ஶபதம் செய்தேன். அவன் தன் வ்ரதத்தைப் பொருட்படுத்தினானோ? இல்லை. என் ஶபதத்தை நிறைவேற்றுவதின் பொருட்டுத் தேரினின்றும் ஒரு குதி குதித்தான். எங்கிருந்தன் திருவாழியை. பூதேவி நடுநடுங்கினள். என்ன அழகு! என்ன கம்பீரம்! என்ன உல்லாஸம்! திவ்ய ஸேவை. தரையில் புரளும் பீதாம்பரம்; இங்கு மங்கும் அசையும் வனமாலை; புழுதி படிந்து சுருண்டிருண்டு அடர்ந்த கூந்தல்; திருநெற்றியில் துளிக்கும் ச்ரம ஜலம்; யானைமேல் பாயும் சிங்கம் போல் ஓடிவந்தான். நானோ கணக்கற்ற பாணங்களால் அடித்தேன். திருமேனி முழுவதும் ரக்த வெள்ளம். அர்ஜுனன் பலவகையில் தடுத்தும் பலாத்காரமாய் மீறிக்கொண்டு என்னை ஸம்ஹரிப்பதின் பொருட்டு ஓடிவந்தான். அந்தப் பகவான் முகுந்தனே எனக்குக் கதி. கண்ணனல்லால் தெய்வ மில்லை] என்று துதித்தார் மஹான் பீஷ்மாசார்யர். அக் கண்ணபிரான் நம்முடைய வ்ரதத்தைக் காப்பாற்றப் பின்னடைவனோ? நமது ஆழ்வார் ஆசார்யர்கள் காட்டிக்கொடுத்த உறுதிநிலை யன்றோ இது?

மற்றுமோர் தெய்வ முளதென் றிருப்பாரோடு
உற்றிலே னுற்றது முன்னடியார்க் கடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட் டெழுத்தும்
கற்றுநான் கண்ணபுரத் துறை யம்மானே.

[பெரியதிருமொழி 8-10-3]

[உன்னையன்றி வேறொரு தெய்வ மிருப்பதாக எண்ணி மோஹமுறும் தாமஸ ஜனங்களுடைய சேர்க்கை எனக்குக் கிடையாது. கண்ணபுரத்து உறையம்மானே! உன்னிடம் திருமந்த்ரம் கற்றேன். அது பற்பல பொருள்களைத் தெரிவிக்கின்றது. ஆனால் அதில் நான் முக்யமாய் அறிந்த விஷயம், உன் அடியார்க்கடிமை என்னும் ஸாரார்த்தம். புருஷார்த்தம் உன் கைங்கர்யம். அதற்கு எல்லைநிலம் பாகவத கைங்கர்யம். அதற்குவிரோதி தேவதாந்தர ஸம்பந்தம்; அதின் முடிவு ததீய ஸ்பர்சம்] என்று கலியன் பறை சாற்றியருளினர். அவர் மதத்தைத் தழுவுகின்றவர்களும் அவர் கொள்கையை உறுதியுடன் நிலைநாட்டுபவர்களும் நாம் என்பதை ஸர்வஜ்ஞன் அறியானோ? அவன் தன் தொண்டர்களிடம் காட்டும் பக்ஷபாதத்தைப்பற்றிக் கூறவும் தரமோ? இவ்வர்த்தத்தை அநுஸரித்து ஸ்வாமி தேசிகன் அருளும் ச்லோகம் :—

“ நாயெ நஷூரணஉ ந்ரூஉ நஉவி வா தஹாஹி நாஸீகி நீ
நாஸீகஷூர ஹணீயவஸஊஹஉஆ வாஆ ந யாஆஉஹெ ।
ஸஊா நாஙூ ஞஹெஉஹி யிஷுீரயாம்ஸஊா ஷூஸிஊாஷி நாம்
உஊகெஸ்ஞ்ருதி நவூஹா தவஉயாவஸ்திம் வூவஸ்கீம் உஊஹஊ: ॥”

எம்பெருமான் திருநாபியானது அத்யந்தம் ஆழமும் அழகும் பொருந்திய தாமரை ஓடை. அவன் ஸர்வ கந்தன். அவன் தொப்புளில் மலர்ந்த அரவிந்தத்தின் பரிமளத்தைக் குறித்துப் புகலவும் தேவையோ? அவ்வரவிந்தத்திலும்

மேம்பட்ட சோபையும் பரிமளமும் மிகுந்தது எங்கள் வாக்கு. ஆ! அது என்ன அத்தகைய மேன்மை என்று ஸந்தேஹமுற வேண்டாம்.

> "திருவிடமே மார்பம் அயனிடமே கொப்பூழ்
> ஒருவிடமும் எந்தை பெருமாற் கரனேயோ"
> "ஏருளு மிறையோனும் திசைமுகனும் திருமகளும்
> கூருளும் தனியுடம்பன்"

என்னும் ஆழ்வார் அருளிச்செயலை ஆராய்ந்து பாருங்கள்; உண்மை விளங்கும்.

எம்பெருமான் திருமேனியில் கொப்பூழ் என்ன? திவ்யமங்கள விக்ரஹம் முழுவதும் தேவதாந்தர ஸம்பந்தமயம். எங்கள் வாக்குக்கு அது லவலேசமும் கிடையாது. அத்தகைய நறுமணங் கமழும் வாயினால் இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய போகங்களையும் ஸ்வர்க்க ஸுகங்களையும் வேண்டோம். அவைகள் இப்பொழுது முளைத்து மறு காலைப் பொசுங்கும் புல்லுக்கு நிகராகியது. அதைக்காட்டிலும் மிகவும் சிறப்பு வாய்ந்த ஆத்மாநுபவத்தையும் விரும்போம். அவைகளைக்காட்டிலும் ஸாரதமமாகிய ப்ரஹ்மாநந்தத்தை யருளும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் யாசிக்கமாட்டோம். இவ்வளவென்ன? இவ்வனைத்தும் ஒன்றுகூடி வரினும் விரும்போம். ஆ! இது என்ன விந்தை? ஆனால் எதுதான் உங்கள் விருப்பம்? சதுர்வித புருஷார்த்தங்களை தவிர்த்து வேறு என்ன உளது? மந்தமதிதள் இவர்கள் என்று பரிஹஸிக்கிறீர்க எல்லவா? கேளுங்கள்; எம்பெருமான் அடியார்கள் அநுக்ரஹம் ஒன்றையே எதிர்நோக்கி நிற்கும் சாதக பக்ஷிகள் நாங்கள். பாகவதோத்தமர்கள் தேவதாந்தர ஸம்பந்தமற்ற பரிசுத்தர்கள். ஒருவராலும் அசைக்கவொண்ணாத மஹாவிச்வாஸத்தை உடையவர்கள். அந்த:புரவாஸிகளாகிய பதிவ்ரதா தர்மத்தை ஆசரிப்பவர்கள். அவர்கள் க்ருபை ஒன்றிருந்தால், அருணோதயத்துக்குப் பின் ஸூர்யோதயம் தானே வருவதுபோல், மோக்ஷஸாம்ராஜ்யம் தானாகவே வலுவில் வந்தடையும். அவன் அந்தரங்க நாயகிகள் படிதாண்டாப் பத்நிகள். அவர்கள் மேல் தேவதாந்தரங்களுடைய நிழலும் தாக்காமல் பாதுகாப்பவனன்றோ பகவான்? ஆகவே என் வ்ரதத்தை நிலை நிறுத்தும் பொருட்டு என்னை இங்குக் கொண்டுவந்து சேர்த்தான் என்று கடல் மடை திறந்தாற்போல் அமுத மழை பொழிந்தார் ஸ்வாமி.

இவ்வத்புத உபந்யாஸத்தைக் கேட்டுப் பரவச மடைந்தேன். 'இதுவுமோர் ஆசார்ய கடாக்ஷமோ?' என்று வியந்தது என் உள்ளம். பதில் சொல்வதற்கு நா எழுந்தாலன்றோ? மின்சார சக்தியானது விளக்கு ரூபமாகவும் ஜல ரூபமாகவும் பேச்சு மூலமாகவும் வெளிப்படுவதுபோல், ஆநந்த உணர்ச்சி உள்ளடங்காமல் கண்ணீரும் மயிர்ச் கூச்சலும் தழதழப்புமாய்ப் பரிணமித்தது. முடிவில் ஒருவாறு தட்டுத் தடுமாறி, "நான் என்ன சொல்வது? கண்ணன் கருணையோ? ஸ்வாமியின் அருளோ? அல்லது முன்னோர்கள் செய்த தவமோ? இதையெல்லாம் சொல்லி யென்ன பயன்? அனைத்தும் எனதாண்டவன் கடாக்ஷம். அது இந்தச் சேதநனை அநேக மஹான்களின் க்ருபைக்குப் பாத்ரமாகுமாறு செய்கிறது. முடவனுக்குக் கொம்புத் தேன் கிட்டினால் அதைக் காட்டிலும் வேறு

189224

ஏது ஆச்சர்யம்! இது ஒரு இன்பக் கனவோ? ஆநந்த நினைவோ? ஏது மறியேன். கன்றை நினைத்து ஓடிவரும் பசுவை ஒத்தது மஹான்களின் வரவு" என்று என் மனத்திற்குத் தோன்றியவாறு ப்ரலாபித்தேன்.

ஸ்வாமியின் வதநத்தில் மந்தஹாஸம் தவழ்ந்தது. வாஸ்தவம்; இதில் என்ன ஸந்தேஹம்? ஸதாசார்ய கடாக்ஷத்தால் அன்றி ஸாதுக்களின் ஸங்கம் கிடைக்காது. ஆசார்ய கடாக்ஷம் ஒன்று உண்டானால், ஞானம் பக்தி வைராக்யம் முதலிய ஸகல ஸம்பத்துக்களையும் கையால் எட்டிப் பறிக்கலாம்.

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்று அருளிச் செய்தார் ஸ்வாமி தேசிகன். அவ்வமுத மொழிகள் என்றைக்காகிலும் வீண்போகுமோ? ஸதாசார்ய கடாக்ஷத்துக்கு நிகர் எது தான் உண்டு? [தொடரும்]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ஸூ ஆவணி மீ

1௳	சனிக்கிழமை	...	சூந்ய திதி; ஸிம்ஹ ஸங்க்ரமணம்
2௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண ஷஷ்டி திதி
3௳	திங்கட்கிழமை	...	வைகாநஸ ஸ்ரீ ஜயந்தி
4௳	செவ்வாய்க்கிழமை	...	முநித்ரய ஸ்ரீ ஜயந்தி
5௳	புதன்கிழமை	...	ஸ்ரீ பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி; நவமி—தசமிதிதி த்வயம்
6௳	வியாழக்கிழமை	...	ஏகாதசி திதி
7௳	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம் த்வாதசி திதி
10௳	திங்கட்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
14௳	வெள்ளிக்கிழமை	...	ஸாமோபாகர்மம்
20௳	வியாழக்கிழமை	...	தசமி திதி
21௳	வெள்ளிக்கிழமை	...	ஏகாதசி திதி
22௳	சனிக்கிழமை	...	அதிதி: ஸர்வ ஏகாதசி வ்ரதம்
23௳	ஞாயிற்றுக்கிழமை	...	த்வாதசி திதி: ஸர்வ ச்ரவண த்வாதசி
27௳	வியாழக்கிழமை	...	ப்ரதமை திதி: மஹாலய பக்ஷாரம்பம்
28௳	வெள்ளிக்கிழமை	...	த்விதீயை — த்ருதீயை திதி த்வயம்
29௳	சனிக்கிழமை	...	சதுர்த்தி திதி
30௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண பஞ்சமி திதி
31௳	திங்கட்கிமை	...	சூந்ய திதி: கந்யா ரவி 51-31.

[குறிப்பு:— கந்யா ரவி ஸங்க்ரமண ச்ராத்தம் இந்த மாஸம் 31-ம் தேதியில் ஸம்பவியாமல் மறுதினமே ஸம்பவிக்கிறபடியால், அன்று ஸங்க்ரமண தோஷ மில்லை என்றும் அந்தத் திநத்திலேயே ஸிம்ஹ சுக்ல ஷஷ்டி திதி ச்ராத்தத்தைச் செய்ய வேண்டு மென்றும் சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர், அன்று ஸங்க்ரமண தோஷம் இராவிட்டாலும், ஸங்க்ரமண ஸ்பர்சம் அததிருத்திற்கிருக்கிற படியால், அப்படிப்பட்ட ஸ்பர்சமு மற்று சுத்தமாக இருக்கும் பூர்வ திதியாகிற ஆவணி மீ 2-ம் தேதியே அந்த ஷஷ்டி திதி என்கிறார்கள்.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஒரு ஸம்சயம்

"நாழிகை கூறிட்டுக் காத்துநின்ற வரசர்கள் தம்முகப்பே
நாழிகை போகப் படைபொ ருதவன் தேவகிதன் சிறுவன்
ஆழி கொண்டன் றிரவி மறைப்பச் சயத்திர தன்தலையைப்
பாழி லுருளப் படைபொ ருதவன் பக்கமே கண்டா ருளர்."

[பெரியாழ்வார் திருமொழி 4—1—8]

[அர்ஜுநன், பதின்மூன்றும் நாட் போரில், தன் புத்ரனை அபிமன்யுவைக் கொன்ற ஜயத்ரதனை, மறுநாள் ஸூர்யன் அஸ்தமிப்பதற்கு முன்னே கொல்வதாகப் பல ப்ரதிஜ்ஞைகள் செய்ய, அது நிறைவேறக் கூடாதென்று அந்த ஜயத்ரதனை எதிரிகளால் உட்புக முடியாதபடியாக வ்யூஹத்திலே நிறுத்தி, 'நீங்கள் இத்தனை நாழிகை காத்துக்கொண்டிருங்கள்; நாங்கள் இத்தனை நாழிகை காத்துக்கொண்டிருக்கிறோம்' என்று பகல் முப்பது நாழிகையும் அவனுக்கு ஒரு நலிவு வாராதபடி காத்துக்கொண்டு நின்ற அதிரத மஹாரதரான ராஜாக்கள் முன்னே ஸ்ரீ க்ருஷ்ணன் பகல் நாழிகை முப்பதும் சென்றதாகத் தோற்றும்படி, நினைவறிந்து கார்யம் செய்யும் தனது சக்ராயுதத்தைக் கொண்டு ஸூர்யனை மறைக்க, 'ஆதித்யன் அஸ்தமித்தான்' என்று ஜயத்ரதன் வெளிப்பட்டு நின்றவளவிலே, அர்ஜுநன் தனது அம்பைக் கொண்டு அந்த ஜயத்ரதன் தலையை அறுத்து, ஸ்ரீ க்ருஷ்ணன் அருளியபடி அத்தலையைக் கீழே விழ வொட்டாமல் ஆகாயத்தில் கிடந்து உருளும்படி தன் அம்பினாலே செய்து கொண்டிருந்தான்.] என்று வில்லிபுத்தூர் விஷ்ணு சித்தராலும்;

"அலமன் னுமடற் சுரிசங்க மெடுத்
தடலா ழியினு லணியா ருருவின்
புலமன் னுவடம் புனைகொங் கையினாள்
பொறைதீ ரமுனு ளடுவா ளமரில்
பலமன் னர்படச் சுடரா ழியினைப்
பகலோன் மறையப் பணிகொண் டணிசேர்
நிலமன் னனுமா யுலகாண் டவனுக்
கிடமா மலையா வதுநீர் மலையே."

[பெரிய திருமொழி: 2-4-3]

[மிகவும் அழகியதான திருமேனியில் யுத்தோந்முகமான திருவாழியோடு கலப்பையும் ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும் தரித்து, ஸர்வேச்வரனுடைய ஸர்வ கரணங்களும் தன் பக்கலிலே ப்ரவணமாம்படி ஸர்வாபரணங்களாலும் அலங்க்ருதமான திருமுலைத் தடத்தையுடைய ஸ்ரீ பூமிப் பிராட்டியாருடைய பாரமானது போம்படியாகப் பாரத யுத்தத்தில் (ஜயத்ரதன் முதலிய) அநேக ராஜாக்கள் மடியும்படி மிக்க ஒளியையுடைய திருவாழியால் ஸூர்யன் மறையும்படியாகப் பணித்து, அழகு பொருந்திய அரசனுமாய் உலகத்தை ஆண்டவனான எம்பெருமான் திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருக்கும் இடம் திருநீர்மலையாகும்] என்று மானவேந் பரகாலன் கலியனாலும்;

"பகல் நடுவே யிரவழைக்க வல்லார் வந்தார்" [திருச்சின்னமாலை-7] என்று, அக்கலியனுரை குடிகொண்ட கருத்துடையோனான ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனாலும்;

" மாயிரு ஞாயிறு பாரதப் போரின் மறைய வங்ஙன்
பாயிரு ணீதந் ததென்ன கண்மாயம் பவள நெற்றிச்
சேயுயிர் மாமதில் சூழரங் கேச திரண் டுதித்த
வயிர கோடி திவாகரன் போலொளி ராழிகொண்டே."

[திருவரங்கத்துமாலை—70]

[திருவரங்கா! நீ பாரத யுத்தத்தில், ஒருங்கே உதயமாகிய பலகோடி ஸூர்யர் போல் ப்ரகாசிக்கின்ற திருவாழியாழ்வானல் மிகப் பெரிய ஸூர்யன் மறையும்படி பரவிய இருட்டை உண்டாக்கியது என்ன கண்கட்டு வித்தையோ!] என்று திவ்ய கவி பிள்ளைப் பெருமாளையங்காராலும், பஞ்சவரைப் பலவகையாலும் காக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த கண்ணபிரான், அர்ஜுநனை ரக்ஷிப்பதற்குத் தனது திருவாழியாழ்வானைக் கொண்டு ஸூர்யனை மறைத்ததாக ஒரு மிடருகப் பேசப் பட்டிருக்கிறது.

'வூயஹ்தஜாவு வஹஜர' என்று மஹாஜ்வாலைகளுடன் கூடியதும், "சிகி யிரவி மதியமுமிழ் தேசுந்த வெண்டிசைத், திணிமருள் செகவுகந்து சேமங்கள் செய்ததும், திகழரவணை யரங்கர் தேசென்ன மன்னிய திரிசுதரிசனர்" என்று எம்பெருமானேடொக்க கோடி ஸூர்ய ஸம ப்ரபையுமுடைய ஸ்ரீ சக்ரத்தாழ்வானைக் கொண்டு கண்ணன் ஸூர்யனை மறைத்து உலகில் இருளை உண்டாக்கிய தெப்படி ! ஒரு பேரொளியினல் ஒரு சிற்ரெளி மறைக்கப்படலாம். உலகு அதனல் இருளுண்டது எவ்வாறு! இதன் தத்வத்தை வித்வான்கள் அடியேன் போன்ற மிதஜ்ஞர்கள் அறியுமாறு ஸப்ரமாணம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா வாயிலாகத் தெளிவிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ஒரகடம். கோ. ஸுதர்சந தாஸன்.

ஸ்ரீ:

* அபுநராவ்ருத்தி விசாரம்

(1)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் புத்தங்கோட்டகம்
ஸ்ரீ உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையில் அபுநராவ்ருத்தி விஷயமாக மறுபடியும் சில ஸம்சயங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ தேசிகன் பரமபத ஸோபாநத்தில் 'அர்ச்சிராதி கதியினலே தேச விசேஷ ப்ராப்தியில்லை யாதலால்' என்று விசேஷித்து அநுக்ரஹித்திருப்பதற்கு ஸமாதாநம் ஏற்படவில்லை என்பது முதல் ஸம்சயம். இதற்கு ஸமாதாநம்:— ஸ்ரீ தேசிகன் பரமபத ஸோபாநத்தில், 'அர்ச்சிராதி மார்க்கத்தினல் மோக்ஷத்தை அடைந்தவர்கள் திரும்பவும் இந்த மநுஷ்ய லோகத்தை அடைகிறதில்லை' என்று ச்ருதி சொல்வது 'முக்தன் எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிக்கிறுன்' என்னும் ச்ருதிக்கு விருத்தமாகுமே என்று ஸந்தேஹித்து, அந்த ஸந்தேஹம் வாராமைக்காக, 'திரும்பி மநுஷ்ய லோகத்தை அடைகிற தில்லை' என்பதற்கு 'இந்த லோகத்தில் ஜந்மாதி துக்கங்களை அடைகிறதில்லை' என்பது

---

* இந்த விஷயத்தைப்பற்றி ஸ்ரீ. உப. வித்வான் மதுராந்தகம் வீரராகவாசார்யரிடமிருந்தும், கருடபுரம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யரிட மிருந்தும், ஸ்ரீ. உப. வித்வான் தென்பரை ஸா. ஸ்ரீ ராஜாகோபாலாசார்யரிட மிருந்தும் வ்யாஸங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த ஸஞ்சிகையில் இடமில்லாததால் அவை அடுத்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்படும். [ஸம்பாதகர்.]

அர்த்தமாகையால் ஷி சங்கை உண்டாகாது என்று அருளிச்செய்தார். அதற்குமேல் 'மோக்ஷத்தை அடைந்தவன், பிறகு ஸம்ஸார துக்கங்களை அடைகிறதில்லை' என்று சொன்னால், 'மோக்ஷத்திற்குப் போன வைதிக புத்ரர்கள் ஸம்ஸார லோகத்தில் வந்து துக்கங்களை அநுபவித்தார்கள் என்று ஸ்ரீ பாகவதாதிகளில் சொல்லப்பட்டிருப்பது விருத்தமாகுமே' என்று சங்கித்து, அதற்கு ஸமாதாநத்தை 'வைதிக புத்ராதிகள் இவ்வர்ச்சிராதி கதியினால் தேசவிசேஷ ப்ராப்தி பெற்றவர்களல்லாமையாலே அவர்களை மீட்டது விருத்தமன்று' என்று அருளிச் செய்திருக்கிறார். இங்கு முதல் சங்கை அர்ச்சிராதி மார்க்கத்தைப் பற்றியதாகையால், இரண்டாவது ஶங்கைக்கு ஸமாதாநத்தைச் சொல்லும்பொழுது ஏற்கெனவே திருவுள்ளத்தில் உபஸ்திதமாயிருந்த அர்ச்சிராதி மார்க்கத்தின் ஸ்வபாவத்தைக் கொண்டே இரண்டாவது ஶங்கைக்கு ஸமாதாநத்தை 'வைதிக புத்ராதிகள்……… விருத்தமன்று' என்று அருளிச் செய்தார். ஏற்கெனவே முதல் சங்கையில் புத்தியில் ப்ரஸக்தமாய் உபஸ்திதமான அர்ச்சிராதி மார்க்க ஸ்வபாவத்தைக் கொண்டு ஸமாதாநம் சொல்வதை விட்டு, ஏற்கெனவே ப்ரஸக்தி யில்லாததினால் அநுபஸ்திதமான 'உபாயாநுஷ்டாநம் செய்து தேச விசேஷ ப்ராப்தி யில்லாமையாலே' என்கிற ஹேதுவை ஸமாதாநமாக ஸுலபமாய்ச் செய்திருக்கலாமே என்று கேட்டிருப்பதற்கு, 'அது அப்பொழுது அப்ரஸக்தமாகையால் அநுபஸ்தித மாகையினால் ஸுலபமன்று' என்பதுதான் ஸமாதாநம். இதனால் அர்ச்சிராதி மார்க்கத்தை விசேஷித்து நிர்த்தேசம் செய்திருப்பதற்கு ப்ரயோஜநம், இந்த மார்க்கம் புநராவ்ருத்தி யில்லாதது என்பதைத் தெரிவிப்பதற்காக என்பது வ்யக்தமாகின்றது. இதை விட்டு அர்ச்சிராதி மார்க்கத்தை விசேஷித்து அருளிச்செய்ததற்கு, மற்றை மார்க்கங்களெல்லாவற்றையும் வ்யாவர்த்திப்பதற்காக என்று ப்ரயோஜநம் சொன்னால், க்ரமமுக்தி மார்க்கத்திலும் அபுநராவ்ருத்தி சொல்லுகிற பாரத ப்ரமாணம் விரோதிக்குமென்பதை முன்னமேயே எழுதியிருக்கிறோம். இந்த ப்ரமாண விசேஷ விரோதம் வராமலிருப்பதற்காகவே 'அர்ச்சிராதி கதியினாலே' என்னும் தேசிக ஸ்ரீஸூக்தி அநாவ்ருத்தியை யுடைய மார்க்காந்தரங்களுக்கும் உபலக்ஷணம் என்றும் சொல்லியிருக்கிறோம்.

இரண்டாவது ஸந்தேஹம்: 'கர்ம ஸம்பந்த மிருக்குமவர்களுக்கும் வைகுண்ட ப்ராப்தி ஸம்பவிக்குமோ? கர்மங்கள் நிச்சேஷமாக நிவ்ருத்தங்களான பிறகே தேச விசேஷ ப்ராப்தி என்று சாஸ்த்ரங்கள் சொல்லவில்லையா?' என்பதுதான். இதற்கு ஸமாதாநம்:- 'கர்ம ஸம்பந்தமுள்ள அர்ஜுநன், வைதிக ப்ராம்ஹணன், குதிரைகள்,' ப்ராக்ருத பூதமயங்களான தேர் முதலிய ஸாமான்களும் ஸ்ரீ வைகுண்டம் போய்த் திரும்பிவந்ததாக அநேக புராணங்களும் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியும் ந்யாய ஸித்தாஞ்ஜந ஸ்ரீஸூக்திகளும் வ்யக்தமாகச் சொல்வதால் இந்தக் கேள்விக்கு இடமில்லை. இதை நினைத்தே 'வைதிக புத்ராதிகள்' என்று 'ஆதி' சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்த்ரங்களில் ஸர்வ கர்மங்களும் கழிந்த பிறகே மோக்ஷ ப்ராப்தி சொல்லியிருப்பது பரிபூர்ண ப்ரஹ்மாநுபவத்துடன் கூடின மோக்ஷவிஷய மாகையால் விரோதமில்லை. வைதிக புத்ராதிகள் மோக்ஷத்தில் இருந்தாலும் அவர்களுக்குப் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ மில்லை.

மூன்றாவது ஶங்கை: ப்ராக்ருதாப்ராக்ருத பதார்த்தங்களின் சேர்க்கையை வேறு மார்க்க மின்றிக்கே ஸ்ரீ தேசிகன் கல்பித்திருப்பது போலத் தெரிகிறதாக எழுதியிருப்பது சரியன்று. அவைகள் ஏன் கலந்திருக்கக் கூடாது என்று கேட்டால் என்ன விரோதம் சொல்ல முடியும்? ஸர்வ ஶக்தியை யுடைய ஈச்வரன் அப்ராக்ருதங்களான தன்னுடைய சரீரங்களை ப்ராக்ருதமான இவ்வுலகத்தில் கலந்திருக்கும்படி செய்வது போல, ப்ராக்ருதங்களான வைதிகன் அர்ஜுநன் இவர்களுடைய சரீரங்களையும் அப்ராக்ருத லோகத்திற்கு அனுப்பிச் சிறிதுகாலம் இருக்கச் செய்வதும் ஏன் உசிதமாகாது? அப்படிச் செய்வது தான் ஸர்வ சக்திக்கு உசிதம். இதை உத்தேசித்தே ஸ்ரீ தேசிகன் 'இடரின்றியே' என்னும் ஆழ்வார் பாசுரத்தை ஸங்க்ரஹிக்கிற தாத்பர்ய ரத்நாவளியில், 'சுவடி தவடு நாகு' என்பது ஸர்வேச்வரனுடைய ஸர்வ சக்தித்வத்தைச் சொல்வதாக அருளிச்செய்தார்.

அச்சரித்ரத்தில் எவ்வளவோ ஆச்சர்ய கார்யங்களை ஸ்ரீ க்ருஷ்ணன் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரம் மைல் தூரமுள்ள வழியை அரை மயிலாகப் பண்ணினதாகச் சொல்லியிருப்பதால் அந்த வழியினாலே வைதிகனுடைய சிசுக்களை முன்பு ஸ்ரீ வைகுண்டத்திற்கே அனுப்பியிருக்கலாம். ‘ந ஹி வஅ நவிரொயெ நஹாயஃ ஹுவ தஅதெ’ ।:தெவஹ-ஹெஹ்யுஷ- வாநெஷ்யுஷ- ஹெத- தெஅவி நீரயஅகஃ । பயிரா நுவதெவாது வதிஅதவஹ்ம் ஹிதெஷிணா’ என்னும் வசநங்களைக் கவனிக்க வேண்டும்.

(2)

தேவனார் விளாகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், அட்வோகேட்.

ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமிக்கு விஜ்ஞாபநம் :—

அபுநராவ்ருத்தி விஷயமாக அடியேனுடைய ஸமாதாநத்தை அநுவதித்து எழுதியிருப்பதைப் பார்த்தேன். அது சரியானபடி இராததோடு மாறுபட்ட அர்த்தம் படும்படி எழுதப்பட்டிருக்கின்றது. அடியேனுடைய பங்க்தி என்னவென்றால்:—‘வைதிக புத்ரர்கள் இருந்தவிடம் ஸூக்ஷ்ம சரீரம் செல்லக்கூடிய இடத்தில் உள்ளது; அல்லது கார்ய வைகுண்டத்தில் உள்ளது. இரண்டில் ஒன்று என்பதுதான் ப்ரக்ருதத்திற்கு ஸமாதாநம். ஸர்வகர்ம நிவ்ருத்தி வரக்கூடிய தேசவிசேஷ மில்லை என்று நிர்ணயிக்கவேண்டும்’ என்பதுதான். தேவரீர்களுடைய அநுவாதம் பின்வருமாறு காணப்படுகின்றது:—‘வைதிக புத்ரர்கள் ஸ்ரீ வைகுண்டம் என்னும் அப்ராக்ருத தேசத்தை அடைந்தார்கள் என்று சொல்வது ஸாத்யமில்லை. இவர்கள் போயிருந்த தேசம் ஸூக்ஷ்ம சரீரத்துடன் போகக்கூடிய கார்ய வைகுண்டமே’ என்பதுதான். இது அடியேனுடைய கருத்துக்கு விருத்தமன்றோ?

[இந்த ஸ்வாமி ப்ரக்ருத ஸம்பந்தமாக ஒரு வ்யாஸத்தைச் சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யுமாறு அநுக்ரஹித்திருந்தார். ஸஞ்சிகையில் இடம் மிதமாக இருந்தபடியால் அது யதாவஸ்திதமாக ப்ரசுரம் செய்யப்படவில்லை; ஸங்க்ரஹிக்கப்பட்டே வெளியிடப்பட்டது. அதை ஸங்க்ரஹிப்பதில் சில தவறுதல்கள் நேர்ந்திருக்கின்றன வென்றும், அதனால் அந்த ஸங்க்ரஹம் தமது பாவத்தை வெளியிடாததுடன், தமது கருத்துக்கு விருத்தமான ஓரர்த்தத்தைக் கொடுக்கும்படியுமிருக்கின்றது என்றும், அவர் ஒரு ஸ்ரீமுகத்தை நியமித்திருக்கிறார். ஒருகால் தவறுதல் ஸம்பவித்தாலும் ஸம்பவித்திருக்கலாம். அப்படி ஸம்பவித்திருந்தால் அது அநவதாநத்தாலேயே நேர்ந்தது என்பதை அந்த ஸ்வாமி திருவுள்ளம் பற்றவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். நமது ஸுஹ்ருத்துக்களுக்கு அதன் ஸ்திதியை விளக்கும்பொருட்டு அந்த ஸ்ரீமுகத்தில் ப்ரதாநமான அம்சத்தை மாத்ரம் இவ்விடத்தில் எடுத்து எழுதியிருக்கின்றோம். ஸம்பாதகர்.]

(3)

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர் B. A. B. L., அட்வோகேட், திருப்பாப்புலியூர்.]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஆனிமாஸத்து ஸஞ்சிகையில் [பக்கம் 147 & 148] ‘வேதாந்த விஷயமான ஒரு ஸந்தேஹம்’ என்னும் ஸம்பாதகரின் குறிப்பில் “அர்ச்சிராதி மார்க்கம் தவிர மற்ற மார்க்கங்களால், மோக்ஷமடைந்தவர்களுக்குப் புநராவ்ருத்தி ஸம்பவிக்கலாமென்று ஸ்ரீ தேசிகன் பரமபத ஸோபாநத்தில் அருளிச் செய்திருப்பதிலிருந்து ஏற்படுகிறது” என்கிற ஶங்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்த [ஆடிமீ] ஸஞ்சிகையில், ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம்

ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும், வேதாந்த ஶிரோமணி தேவனார் விளாகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ தேஶிகாசார்ய ஸ்வாமியும், தஞ்சை தர்மப்ரசாரக ஸ்ரீ. உப. ஸாரம் ரங்காசார்ய ஸ்வாமியும் ஷை ஶங்கைக்கு ஸமாதானம் எழுதியுள்ளார்க ளென்றும், அதனால் ஸம்ஶயம் பெரும்பாலும் நிவ்ருத்தமானாலும் இன்னும் சிறிது அவஶேஷம் இருப்பதாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் ஷை ஸ்வாமிகள் ஸாதித்திருப்பதற்கு உபப்ரஹ்மணமாகக் கொஞ்சம் சொல்ல வேண்டியது அவச்யமாயிருக்கிறது.

இந்த ஸந்தேஹத்துக்கு மூலபூதமான வைதிக புத்ர வ்ருத்தாந்தம், ஸ்ரீ பாகவதம் தஶம ஸ்கந்தம் 89-வது அத்யாயத்தில் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கிறது.

த்வாரகையில் ஒரு ப்ராம்ஹணனுக்குப் பிள்ளைகள் உடனுக்குடன் பிறந்தவுடன் இறந்து போனதால், அவன் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய அரண்மனை வாயிலில் கூக்குரல் இட்டுக்கொண்டிருந்தான். இதை ஒருக்கால் அர்ஜுனன் கேட்டுத் தான் அவனது பிள்ளைகளை இனி மரிக்கவொட்டாமல் ரக்ஷிப்பதாக அபயம் சொன்னான். அதற்கு அந்த ப்ராம்ஹணன், ‘க்ருஷ்ணனால் முடியாத கார்யத்தை நீ எப்படிச் செய்யமுடியும்?’ என்று கேட்டதற்கு, ‘என்னை இன்னான் என்று நீர் அறியவில்லை போலும்! நான் காண்டீவம் தரிக்கும் அர்ஜுனன்; மற்றெவருக்கும் அஸாத்யமான கார்யத்தை முடித்துக் கொடுக்க எனக்கு வல்லமை உண்டு; இனி உமக்குப் பிறக்கும் புத்ரனை நான் கண்டிப்பாய்க் காப்பாற்றுகிறேன்; இல்லாவிடில் நெருப்பில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்’ என்று ஶபதம் செய்தான். பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் ப்ராம்ஹணனுடைய மனைவி ப்ரஸவிக்கும் ஸமயம் நேர்ந்தபோது, ப்ராம்ஹணன் அர்ஜுனனுக்குத் தெரிவித்தான். அர்ஜுனன் உடனே ப்ராம்ஹணன் வீட்டுக்குச் சென்று, அங்கு யம படர்கள் புகாமல் தடுப்பதற்காக ஶரக்கூடு கட்டித் தானும் அருகில் காத்திருந்தான். பிள்ளை பிறந்தது. அழுகைக் குரல் கேட்டது. உடனே மரித்தது. ப்ராம்ஹணன் கூக்குரலிட்டு அர்ஜுனனை நிந்திக்க ஆரம்பித்தான். அர்ஜுனன் எவ்விதமாகிலும் இறந்த பிள்ளையை இட்டு வருவதாக ப்ரதிஜ்ஞை செய்து, யமன் இந்த்ரன் வருணன் முதலிய திக்பாலகர்களுடைய லோகங்களெல்லாம் சென்று தேடியும் பிள்ளையைக் காணமல் வெறுப்புற்று, தான் செய்த சபதப்படி நெருப்பில் விழ யத்தனித்தான். அப்போது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அவனைத் தடுத்துத் தன்னுடன் வரும்படி சொல்லி மேற்குத் திசையில் அழைத்துக்கொண்டு போய், அங்குள்ள த்வீபங்கள் பர்வதங்கள் முதலியவற்றை யெல்லாம் தாண்டி மஹாந்தகாரத்துக்கு அப்பால் ஜலமத்யத்தில் இருக்கும் ஓர் தேஜோமயமான மாளிகையை அடைந்தார். அதன் மத்தியில் ஆதிஶேஷன் மீது வீற்றிருக்கும் ஸ்ரீமந் நாராயணனை இருவரும் தர்ஶநம் செய்து வணங்கினார்கள். பகவான் இவர்களை நோக்கி, “நீங்கள் வந்த கார்யம் எனக்குத் தெரியும்; ப்ராம்ஹணப் பிள்ளைகள் இதே இருக்கிறார்கள்; பாருங்கள்; உங்கள் இருவரையும் நான் பார்க்கவேண்டு மென்றே இப்பிள்ளைகளை இங்குக் கொணர்ந்தேன் நர நாராயணர்களாகிய நீங்கள் இருவரும், உங்கள் அவதார கார்யம் முடிந்தவுடன் என் ஸமீபத்துக்கு வரவேண்டும்” என்று நியமித்து ப்ராம்ஹணப் பிள்ளைகளை அவர்களுடன் அனுப்பி விட்டார். இவர்கள் திரும்பி வந்து பிள்ளைகளை ப்ராம்ஹணனிடம் ஒப்பிவித்தார்கள். இவ்வாறு கதையை முடித்துப் பிறகு ஶுக மஹர்ஷி

“ நிஶாம்ய வைஷ்ணவம் தாம பார்த்த: பரமவிஸ்மித: ।
யத்கிஞ்சித் பௌருஷம் பும்ஸாம் மேநே க்ருஷ்ணாநுகம்பிதம் ॥
இதீத்ருஶாந்யநேகாநி வீர்யாணீஹ ப்ரதர்ஶயந் ।
புபுஜே விஷயாந் க்ராம்யாந் ஈஜே சாத்யூர்ஜிதைர்மகை: ॥”

என்று அருளிச் செய்கிறார். இதைப் பராமர்ஶித்துப் பார்த்தால், அர்ஜுனனுடைய கர்வத்தை அடக்கி அவனுக்கு ஸ்வரூப ஜ்ஞாநம் உண்டாக்கவேணு மென்று நினைத்து ஸ்ரீ க்ருஷ்ணன் தன் மாயா பலத்தால் இவ்வாறு ஓர் அத்புதத்தைக் காட்டியதாகப்

புலப்படுவதால், இதைப் புநரா வ்ருத்தி ஶங்கைக்கு ஆதாரமாக்குவது யுக்தமாகத் தோன்றவில்லை. இங்குச் சொன்ன ஸ்தாநம் இன்னதென்று ஸ்ரீ பாகவதத்தில் குறிப்பிடாமையால், க்ருஷ்ணன் தன்னுடைய ஸங்கல்ப விஶேஷத்தால் தாத்காலிகமாகக் கல்பித்த ஸந்நிவேஶ மென்று சொல்வது அநுசிதமாகாது. ஒருக்கால் இது கல்பிதமல்ல வென்று வைத்துக்கொண்டாலும், கார்ய வைகுண்டம் ச்வேத த்வீபம் விஷ்ணு லோகம் முதலிய பகவத் திவ்ய வாஸ ஸ்தாநங்களில் ஒன்ருயிருக்கலாம். ப்ருகு மஹர்ஷி மும்மூர்த்திகளையும் பரீக்ஷை செய்து பரத்வ நிர்ணயம் செய்வதற்காக வைகுண்டம் சென்றதாக இவ்வத்யாயத்தின் முன் பாகத்தில் சொல்லப்பட் டிருப்பதால், இதுவும் அதுவே யென்ருே, அல்லது அது போன்ற தென்ருே, இருக்கவேண்டு மென்று நிச்சயிக்க இடமுண்டாகிறது. மேலும் அர்ஜுநனும், அவதார ரூபத்துடன் விளங்கும் க்ருஷ்ணனும் ரதத்துடன் போய்த் திரும்பி வந்ததாகச் சொல்லி யிருப்பதால், இது ப்ரக்ருதி மண்டலத்துக்குப் புறம்பேயுள்ள முக்த ப்ராப்யமான தேஶ விஶேஷ மென்று கூறுவது உசிதமாகத் தென்படவில்லை. இதைக் கணிசித்தால், பரமபத ஸோபாந வாக்யத்தில், வைதிக புத்ரர்கள் விஷயத்தில் அர்ச்சிராதி மார்க்கமும் தேஶ விஶேஷ ப்ராப்தியும் நிஷேதிக்கப் படுகின்றன வென்று ஸ்ரீ தேவனர் விளாகம் ஸ்வாமி ஸாதித்திருப்பது யுக்தமாகத் தோன்றுகிறது.

ஆனல் ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் இந்த ஸ்தாநத்தை 'பரமபத' ஶப்தத்தால் நிர்த்தேஶித்திருப்பதால், இது முக்த ப்ராப்யமான தேஶ விஶேஷ மென்றே ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் என்று ஸந்தேஹிக்க இடங்கொடுக்கிறபடியால், இதைப் பற்றிக் கூலங்கஷமாக விசாரிக்க வேணுமென்று ஸம்பாதக ஸ்வாமி அபிப்ராயப் படுவது யுக்தமே. ந்யாய ஸித்தாஞ்ஜந வாக்யாநுபூர்வி பின் வருமாறு :—" [illegible]?" பௌதிக த்ரவ்ய நிஷ்பந்நமான ப்ரதிமையில் " [illegible]" இத்யாதி பகவச் சாஸ்த்ர வசநங்களைக் கொண்டு பகவான் தமது அஸாதாரணமான அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்துடன் ஸாந்நித்யம் செய்கிருரென்று நாம் கூறுவதை, பகவச் சாஸ்த்ரத்தை ப்ரமாணமாக ஒப்புக் கொள்ளாத மதாந்தரஸ்தர்கள் ஆக்ஷேபிக்கின்றனர். ஆதலால் அவ்வாக்ஷேபத்தை ப்ரஸ்தாவித்து அதற்கு ஸமாதாநம் கூறவேணுமென்று எண்ணியே ஸ்வாமி தேஶிகன் இந்த ப்ரகரணத்தில் இவ்வாக்யாநுபூர்வியை அருளிச் செய்துள்ளாரென்பது ஸுஸ்பஷ்டம். இப்படி அர்ச்சா விக்ரஹத்தில் பகவத் ஸாந்நித்யத்தை ஒப்புக் கொண்டால், ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கம் நேருமே யென்பது பிறர் ஆக்ஷேபம். அவ்வித ஸம்ஸர்க்கம் உப பந்நமே தவிர ஆக்ஷேபார்ஹ மல்ல வென்பது ஸ்வாமியின் பதில். இதை உபய ஸம்ப்ரதிபந்நமான த்ருஷ்டாந்தங்களைக் கொண்டு ஸாதிக்கிருர்.

பகவான் விபவாவதாரத்தில் தமது அப்ராக்ருத திவ்ய விக்ரஹத்துடன் அவதரிக்கிருரென்பது கீதாதி ஸித்தமானபடியால், அவ்வித ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கம் ஒப்புக்கொண்டே தீரவேண்டிய தென்று அதை முதல் த்ருஷ்டாந்தமாகக் கூறினர். இது நித்யஸூரிகளும் முக்தர்களும் தமது இஷ்டம்போல் திவ்ய ஶரீரங்களுடன் எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிக்கிருர்கள் என்கிற ச்ருதி ஸித்தமான விஷயத்துக்கும் உபலக்ஷணமாகும். இப்படி அப்ராக்ருத லோகத்தில் இருப்பவர், தம் அப்ராக்ருத ஶரீரத்துடன் இந்த ப்ராக்ருத லோகத்துக்கு வருவதால் ஏற்படும் ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கம் நிராக்ஷேபமானது. இவ்வகையில் ப்ராக்ருத ஶரீரத்துடன் அப்ராக்ருத ஸ்தாநங்களுக்குப் போவதும் ச்ருதி ஸ்ம்ருதி ஸித்த மென்பதை ப்ரதர்ஶிப்பதற்காக '[illegible]' இத்யாதியாக அருளிச்செய்கிருர். அதில் முற்பட நிஷ்பந்நோபாயனை சேதநன் '[illegible]' என்கிற பகவத் ப்ரதிஜ்ஞைக்கு விஷயபூதனய், ஸர்வ கர்ம விநிர்முக்தனய்

ஸ்தூலஶரீர வியோக காலத்தில் ப்ரம்ஹநாடீ த்வாரா வெளிக்கிளம்பி அர்ச்சிராதி மார்க்கமாய்த் திவ்ய தேஶத்துக்குச் செல்லுகையில், தனக்கு ப்ரயாணோபகரணமாக வித்யா மாஹாத்ம்யத்தால் [ராவண வதாநந்தரம் புஷ்பக விமாநத்தைப் பெருமாள் நந்திக்ராமம் செல்லுமளவு நிறுத்திக் கொண்டது போல] நிறுத்திக் கொள்ளப்பட்ட ப்ராக்ருத ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் போவதால் ஏற்படும் ச்ருதி ஸித்தமான ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கம் பேசப்படுகிறது. பிறகு, வைதிக புத்ரர்கள் ஸ்தாந விஶேஷம் போய்த் திரும்பினர்கள் என்ற புராண வ்ருத்தாந்தம் குறிக்கப்படுகிறது. இவை யெல்லாம் ச்ருதி ஸம்ருதி புராணுதி ஸித்தமா யிருப்பதுபற்றி உபயவாதி ஸம்மத மாகையால், ஆக்ஷேபார்ஹ மல்லவென்று தேறிய பிறகு, ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்பந்தத்தைக் கொண்டு கிளப்பிய சோத்யம் இங்கு ப்ரஸ்துதமான அர்ச்சா ஸாந்நித்ய விஷயத்தில் நிரவகாஶம் என்று நிரூபிக்கப்பட்டது.

இங்கு ‘வஶஉவஶெஉவி’ என்கிற ஒரே பதத்தினுல் மோக்ஷாதிகாரி ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் போகு மிடத்தையும் வைதிக புத்ரர்கள் போன விடத்தையும் குறிப்பிடுவதால், இரண்டும் ஒரே ஸ்தாநம் என்பது ஸித்திக்கின்றபடியால், ஸ்ரீ தேஶிகன் அபிப்ராயப்படி வைதிக புத்ரர்கள் சென்றவிடம் முக்த ப்ராப்யமான திவ்யலோக மென்றே ஸ்பஷ்டமாகிறது. ஆகையால் அர்ச்சிராதி மார்க்கம் தவிர வேறு மார்க்கத்தால் பரமபதம் செல்பவர் விஷயத்தில் புநராவ்ருத்தி ஸம்பாவித மென்பது ஸம்பாதக ஸ்வாமியின் ஆக்ஷேபம். இதற்கு இருவிதமாக ஸமாதாநம் கூறுகிறேம்.

இங்கு ‘வஶஉவஉ’ ஶப்தம் ஹாத்தமே தவிர முக்ய வ்ருத்தியல்ல. மோக்ஷாதிகாரி விஷயத்திலேயே இது ஸூக்ஷ்ம சரீர யோகத்துக்குப் பரமாவதியான விரஜா நதியாகிற பரமபத பர்யந்த ஸீமாவைத் தான் குறிக்கக்கூடு மென்பது நிர்விவாதம். இதுவே இரண்டு வ்யாக்யாநத்திலும் ப்ரபஞ்சிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ‘ஶஂஶாயாஂவொஷஃ’ என்பதுபோல் இந்தப் ‘பரமபத’ சப்தம் லாக்ஷிணிகமென்று மோக்ஷாதிகாரி விஷயத்திலேயே ஏற்பட்டுவிட்டால், அதற்குப் பின்வரும் வைதிக புத்ரர்கள் விஷயத்தில் கைமுதிக ந்யாயத்தால் இதை லாக்ஷிணிகமாகக் கொள்ளத் தடையிலலே. அப்படிக் கொள்ளுமிடத்து இதன் ஸந்தர்ப்பத்துக்கு அநுகுணமாக லக்ஷணை கல்பிக்க வேண்டியது அவச்யமாகையால் ‘வஶஉவஶ்ஹவஉஂ’ என்று வ்யுத்பத்தி பண்ணி, ‘பகவான் தமது திவ்ய ரூபத்துடன் ஸேவை ஸாதிக்கும் இடங்களில் ஒன்று’ என்று கூறக் குறையில்லே. ஆனல் அதற்கு அப்ராக்ருதத்வம் சொல்லக் கூடுமோ வென்ருல், த்ரிகுண ப்ரக்ருதி ஸம்பந்த மற்று சுத்த ஸத்வ மயமான பதார்த்தங்கள் யாவும் அப்ராக்ருத ஶப்த வாச்யமாகையால், ப்ரக்திரு மண்டலத்துக்குள் இருந்தபோதிலும், விஷ்ணு லோகம் க்ஷீராப்தி முதலிய பகவதேகாந்த வாஸஸ்தாநங்கள் ததீய திவ்யமங்கள விக்ரஹம் போல் அப்ராக்ருதங்களாகையால், வைதிக புத்ரர்கள் சென்ற விடமும் இம்மாதிரி ப்ரக்ருதி மண்டலத்துக்கு உள்ளிட்ட ஸ்தாந விஶேஷ மென்றே ஸ்வாமியின் திருவுள்ள மென்பது நிராபாதம். இதை வைத்தே ஸ்ரீமத் ரங்கராமாநுஜ ஸ்வாமி தமது ஸித்தாஞ்ஜந வ்யாக்யாநத்தில், ஸூக்ஷ்ம ஶரீர விஷயத்தில் இந்த ஶப்தம் லாக்ஷணிகம் என்று மட்டில் நிரூபித்து, இதைக்கொண்டே வைதிக புத்ரர் விஷயத்திலும் ததநுகுணமாகப் புத்திமான்கள் நயநம் பண்ணிக் கொள்வார்களென்று எண்ணியே அதற்காகத் தனியாக ஒன்றும் விஸ்தரிக்கவில்லே. ‘வைகுண்ட சப்தம் பொதுவாகையாலும்’ என்று பரமபத ஸோபாநத்தில் அருளிச் செய்திருப்பது லக்ஷணு விவக்ஷயா என்பது நிஸ்ஸம்ஶயம். இத்துடன் ஸமயோக க்ஷேமமுள்ள ‘வஶஉவஉ’ ஶப்தத்தையும் அதைப் போலவே பொதுவாகக் கொள்வது ஸ்வாமியின் திருவுள்ளத்துக்கு இசைந்தே யிருக்கும். இவ்விதம் அர்த்தம் கொண்டால், புநராவ்ருத்தி ஸம்பந்தமான ஶங்கைக்கு ப்ரஸக்தியே இல்லாமற்போகும். இதை உத்தேசித்தே ஸித்தாஞ்ஜநத்தில் இந்த ப்ரஸ்தாவம் செய்யப் படவில்லே போலும். [தொடரும்]

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible]

செய்திகள்

(1) இஞ்ஜிமேடு ஸ்ரீ தேவப்பெருமாள் ஸம்ப்ரோக்ஷண வைபவம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வாக்யம்.

[illegible]

ச்லோக:

[illegible]

வாக்யம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்ஹதேசம் தூப்புல். [illegible]

2

ஸ்ரீ கல்யாணப்ரவர்த்தினீ ஸபா, மதுராந்தகம்.

இந்த ஸபையின் பொதுக்கூட்டம் 21-7-46 ஞாயிற்றுக்கிழமை ஷை கலாசாலை ப்ரின்ஸ்பால் ஸ்ரீ. உ. வே. T. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கலாசாலையின் அத்யாபகர்களனைவரும் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். அப்பொழுது (ந்யாயசிரோமணி III வகுப்பில்) T. ஸ்ரீநிவாஸனும், (வ்யாகரண சிரோமணி III வகுப்பில்) T. C. கிருஷ்ணமாசாரியும், கார்யதர்சிகளாகவும், P. C. வரதாச்சாரி (வ்யாகரண சிரோமணி IV வகுப்பு) S. R. ஸ்ரீநிவாஸன் (ஷை II வகுப்பு) M. ஸ்ரீநிவாஸன் (அட்வான்ஸ் IV வகுப்பு) இவர்கள் ஸபையின் ஆலோசனைக் கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அநந்தரம் மங்கள வாழ்த்துடன் ஸபை இனிது கலைந்தது.

T. ஸ்ரீநிவாஸன்

T. C. கிருஷ்ணமாசாரி

கார்யதரிசிகள்.

ஆனந்தக் கவிப்பு

:O:

ஸ்ரீ அழகியசிங்கர் வடதேசங்களில் திக்விஜயம் செய்து மீண்டும் திருவெவ்வுளூருக்கு எழுந்தருளியதைக் குறித்து ஶிஷ்யர்கள் அடைந்துள்ள ஆனந்தத்தைக் குறிப்பது.

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வித்வான் V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B. A.]

(1) சங்கந் தங்குங் கையமலன்
முட்கீழ் வாழ்வு தருமம்மான்
எங்கோ னரங்க சடகோபன்
யாங்கள் மகிழ மீண்டனரால்
வங்கஞ் செறிந்த கடல்சூழ்ந்த
வையத் துள்ள திருப்பதிக
ளெங்குஞ் சென்று வென்றியுட
னெவ்வுள் என்னும் நன்னகர்க்கே.

(2) துடியா ரிடையா ளலர்மாதின்
றுணைவன் கருணைக் கெமையாக்கி
வடியாப் பவமாம் வாரிதியும்
வடியப் புரியும் வண்டகவோர்
அடியோஞ் செய்த தவப்பயனு
யன்பா லீண்டு மீண்டனரா
லிடிகண் டரவம் புற்றொளிக்கு
மெவ்வுள் என்னும் நன்னகர்க்கே.

(3) அன்பும் அருளும் உருவாயோ
ரமுதச் சுவைகொண் டுரைபயிற்றி
முன்புக் கிருந்தோர் மனங்கவரும்
முனிமன் னீண்டு மீண்டனரால்
என்பா ராக்கை நோய்தவிர்த்தெம்
மிதயத் தாபக் கனலணைக்கும்
இன்பக் குளிர்நீர்ப் பொய்கையொளிர்
எவ்வுள் என்னும் நன்னகர்க்கே.

(4) படிக்கும் வானப் பரப்பிற்கும்
பதியா யரவின் பணஞ்செறிய
நடிக்கும் பரனுக் கெமையாக்கும்
நாத னீண்டு மீண்டனர்வான்
வடிக்கு மமுதப் பெருக்கோடு
வாவி வளமுங் கலந்தெழிலி
யிடிக்கச் செறியும் பொழில்சூழ்ந்த
எவ்வுள் என்னும் நன்னகர்க்கே.

(5) சுழலும் பிறவித் துழதியின்கண்
சுற்றி யுழல்வோ மெமைத்திருமால்
கழலே சரண யளித்தளித்த
கருணைப் பெரியோர் மீண்டனரால்
செழுவேய் பொழில்வாய்க் காற்றசைப்பச்
சிந்தும் மணியோ டகல்வானத்
தெழிலி யுதிர்க்கும் முத்திலகும்
எவ்வுள் என்னும் நன்னகர்க்கே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர்

ஸ்ரீ அழகியசிங்கர் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்துக்குத் திருவெவ்வுளூரிலேயே எழுந்தருளியிருப்பதால் சிறிது விராமம் ஏற்படலாம். அது ஸ்ரீ அழகியசிங்கருடைய திருமேனிக்குக் கொஞ்சம் ஆநுகூல்யத்தைக் கொடுக்குமென்று நாம் நம்புகிறோம். ஆனால் மழையில்லாததால் அவ்விடத்தில் ஜலக் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. புஷ்கரிணி சுத்தமாக ஶோஷித்து விட்டது. கிணறுகளிலும் ஜலம் வற்றிக்கொண்டு வருகிறதாம். ஸேவார்த்திகளாக வரும் ஜனங்கள் மஹத்தான ச்ரமத்தை அநுபவிக்கிறார்கள். ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்த பரிஜனங்களும் மிகவும் க்லேஶப்பட்டே வர்த்திக்கிறார்கள். மாடுகள், யானை முதலிய ம்ருகங்கள் இவைகளின் கஷ்டம் சொல்லி முடியாது. ஸ்ரீ வீரராகவன் சீக்ரத்தில் க்ருபையுடன் கடாக்ஷித்து மழை பெய்யும்படி செய்து, ஜனங்களையும் மற்ற ஜந்துக்களையும் கஷ்டத்திலிருந்து நிவர்த்திக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

* * * *

ஸ்வராஜ்ய லாபம்

நமக்கு ஸ்வராஜ்யம் கிடைத்துவிட்டதுபோல் இருக்கிறது. இதுபர்யந்தம் நமது ராஜ்ய நிர்வாஹத்தின் சுமையை வஹித்துவந்த ஆங்க்ல தேசத்தார், நமது தேசத்திலிருந்து ஸமர்த்தர்களென்று தேர்ந்தெடுக்கப்பட்ட சில பெரியோர்களிடம் தமது ராஜ்யபாரத்தை ஒப்புவித்துவிக்கிறார்கள். ராஜ்ய நிர்வாஹம் தங்களுடைய ஸௌஹார்த்தத்துக்கு ஒத்ததாகவும், இக்காலத்துத் தர்மங்களுக்கு அவிருத்தமாகவும் நடத்தப்பட்டு வருகின்றதாவென்பதை ஸ்தூலமாகப் பராமர்சித்துவரும் அதிகாரத்தை மாத்ரம் ஆங்க்ல அதிகாரிகள் தம்மிடம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றை அம்ஶங்களில் நமக்குப் பூர்ண ஸ்வாதந்த்ர்யம் கிடைத்துவிடும். இந்த ஸ்வாதந்த்ர்யத்தைப் பெறுவதற்கு, நமது பெரியோர்களுள் பலர் ஏராளமாகப் பரிச்ரமப்பட்டார்களென்பதை நாம் எல்லாரும் அறிவோம். இவ்வாறு நமது மநோரதம் பூர்த்தியடைந்துவிட்டதை ஸ்வாராஜ்யம் கிடைத்துவிட்டதுபோல நினைத்துப் பண்டித பாமர விபாகமற எல்லா லௌகிகர்களும் ஆநந்திப்பதை நாம் பார்க்கிறோம். இந்த ஆநந்தம் துக்கத்தில் பர்யவஸியாமல் இருக்கவேண்டுமென்பதே நமது ப்ரார்த்தனை.

இதை நினைக்கும்பொழுது, தேஶாந்தரத்தில் வழங்கும் கதை ஒன்று நம்முடைய ஸம்ருதிக்கு வருகின்றது. ஒருகாலத்தில் ஜூனோ, மினர்வா, வீநஸ் என்று மூன்று தேவதைகள் இருந்தார்களாம். அவர்கள் ஸஹோதரிகள்போல மிக்க ஸௌஹார்த்தத்துடன் வர்த்தித்து வந்தார்களாம். இந்த ஸௌஹார்த்தத்தைப் பார்த்து அதை ஸஹியாமல் அதைப் பங்கப்படுத்தவேண்டுமென்றெண்ணி, ஜூபிடர் என்னும் ஒரு பெரிய தேவதை ஒரு ஸமயத்தில் ஸ்வர்ணமயமான பெரிய பழமொன்றை அந்தத் தேவதைகளின் முன்னர், ஆகாஶத்திலிருந்து விழுந்ததுபோலக் கொண்டுவந்து போட்டார். அந்தப் பழம் அதிமாத்ரம் மனோஹரமாயிருந்தது கண்டு, ஜூனோ முதலானவர்கள், அந்தப் பழம் தங்கள் தங்களுக்கே வேண்டுமென்று எண்ணங்கொண்டு, அதை க்ரஹிக்கப்போக, அவர்களுள் ப்ரபலமான சச்சரவு உண்டாகி, அவர்களுடைய பரம மைத்ரம் குலைந்தது மின்றிக்கே அவர்களுக்குப் பெரிய தீமையும் விளைந்ததாம்.

இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் ஸ்வராஜ்யம் அம்மாதிரியான பொற்பழம் போலப் பரிணமியாமலிருக்கவேண்டுமே என்னும் பீதி நமது மனஸ்ஸில் உதிக்கிறது. இந்தத் தேஶத்தில் வஸிக்கும் துருஷ்க ஜாதீயர்கள் இந்த ஸ்வராஜ்யத்தில் தாங்கள் அபேக்ஷித்த அதிகாரங்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லையென்று அதில் அத்ருப்தர்களாய், அதிலிருந்து விலகி நிற்கிறார்கள். அது மாத்ரமின்றிக்கே, அந்த ராஜ்ய பாரத்தை வஹிக்கும் மற்ற அதிகாரிகளின் நிர்வாஹத்தைத் தாம் அங்கீகரிக்கமுடியாதென்றும், அவர்களுடைய கார்யங்களைத் தங்களால் ஶக்யமான அளவு எதிர்ப்பதாகவும் தீர்மானம் செய்திருக்கிறார்களாம். இம்மாதிரியே வேறு சில ஜாதீயர்களும் ராஜ்யத்தை எதிர்க்க முயல்வதாக நாம் அறிகிறோம். ஏற்கெனவே இதர ஜாதீயர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பரஸ்பரம் ஸௌஹார்த்தக் குறைவு இருந்துகொண்டு வருகிறதென்பது ப்ரஸித்தம். இம்பொழுது இந்த ஸம்பவம் அந்த ஆக்ரஹத்தை வளர்த்தி அநேக விபத்துக்களை விளைவிக்குமோவென்று நாம் பயப்படுகிறோம். ஸாமாந்யமாக எந்த ஜந ஸமூஹத்திலும் பிறருக்கு ஹிம்ஸை செய்வதிலேயே நோக்கமுள்ள துர்ஜநங்கள் சிலர் உண்டு. அவர்கள், எப்பொழுது தமது தௌர்ஜந்யத்துக்கு இடங் கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். பெரிய வகுப்பினர்க்குள் இம்மாதிரி கலஹம் நேர்ந்தால் அவர்கள் அந்த வகுப்பினர்களுள் சிலரிடமிருந்து ஒருவிதமான தூண்டுதலைப் பெற்று மஹாஜநங்களுக்குப் பெருந்தீமைகளை விளைவிப்பார்களென்பதில் ஆக்ஷேபமில்லை. 'ராமன் ஆண்டாலென்ன? ராவணனாண்டாலென்ன? நமது தர்மாநுஷ்டாநங்களில்! அவர்கள் தலையிடாமலிருக்கும் வரையில் நாம் உதாஸீநர்களாகவே இருப்போம்' என்னும் மனோபாவத்துடன் இருப்பவர்களே இதில் பெரிய கஷ்டத்தை அநுபவிப்பார்களென்று நமக்குத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட அநுபவம் நமக்கு விதி ப்ராப்தமாக இருந்தால் யாரால் அதைத் தடுக்க முடியும்?

இந்த ஸ்வராஜ்ய ப்ராப்தியால் நமக்கு வேறொரு பெரிய ஆபத்தும் ஸம்பவிக்கும்போல் தோன்றுகிறது. ஆங்க்ல அரசாட்சியில் ராஜ்யாதிகாரிகள் கேவலம் லௌகிக அம்ஶங்களில் மாத்ரம் தமது அதிகாரத்தைச் செலுத்தி வந்தார்களேயொழிய, நமது ஶாஸ்த்ரீய அநுஷ்டானங்களில் அவர்கள் எவ்வித அதிகாரத்தையும் செலுத்தவேயில்லை. இப்பொழுது வந்திருக்கும் அதிகாரிகளோவெனில், நமது ஶாஸ்த்ர விதிகளுக்கு விருத்தங்களான புதிய விதிகளை விதிப்பார்கள்போல் காணப்படுகிறது. ஆலய ப்ரவேஶ விஷயத்தில் அவர்களுடைய நோக்கம் எப்படிப்பட்டதென்பதை நாம் அறிவோம். விவாஹ விஷயமாக மஹாத்மா காந்தி ஸமீப காலத்தில் ‘ஹரிஜநம்’ என்னும் பத்ரிகையில் எழுதியிருப்பதை எல்லோரும் பார்த்திருக்கலாம். பஞ்சம ஸ்த்ரீகளை இதர ஜாதீயர்களும், இதர ஜாதி ஸ்த்ரீகளைப் பஞ்சமர்களும் எவ்வித நிர்ப்பந்தமுமின்றிக்கே விவாஹம் செய்துகொள்ளும் காலம் வரும்பொழுதுதான் நமக்கு க்ஷேமமாம். அதுபர்யந்தம் ‘நமெ ஶாந்திஹ-ஜவிஷ்யூகி’ [நமக்கு மநச் சாந்தி உண்டாகாது] என்று எழுதியிருக்கிறார். புருஷர்களுக்குப்போல ஸ்த்ரீகளுக்கும் ஸகல வ்யாபாரங்களிலும் ஸர்வ ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கவேண்டுமென்பதும் அவர்களுடைய கக்ஷி. அநாதி காலமாக நமக்குக் கிடைத்திருக்கும் ஆசாரம் முதலியவைகளை அநாதரிப்பது மாத்ரமின்றிக்கே, அப்படி அந்த அநாதியான ஆசாரங்களை யாராவது ஸ்தாபிக்க ப்ரயத்நப்பட்டால், அவர்களை சிக்ஷைக்கு உட்படுத்தப்போவதாகவும் சொல்லுகிறார்கள். இவ்விதமான பல க்ரம விரோதங்களும் நமது ஸ்வராஜ்யத்தில் ஸம்பவிக்கப்போவதாகத் தெரிகின்றதாகையால், ஸ்வராஜ்யம் கிடைத்து விட்டதென்று ஆநந்திப்பவர்களுடன் கலந்து, நாமும் ஆநந்தித்து அந்த லாபத்தைக் கொண்டாட நாம் கூசுகின்றோம். எல்லாம் ஶரண்யன் ஸங்கல்பம்போல் ஆகிறது. நம்மால் ஆவது ஒன்றுமில்லை.

* * *

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக இக்யாதி விஶேஷண விஶிஷ்டரான ஸ்ரீகருடபுரம் ஸ்வாமியின் வார்ஷிகத் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் சென்ற வருஷத்திற்போல இவ்வருஷத்திலும் ஸ்ரீமதுராந்தகத்தில் கருடபுரம் ஸ்ரீ. உ. வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் முயற்சியால் மிகவும் த்ருப்திகரமாகக்

கொண்டாடப்பட்டது என்பதைக் கேட்டு நாம்

ஸ்ரீகருடபுரம் ஸ்வாமியின் மிகவும் ஸந்தோஷிக்கிறோம். இம்மாதிரியான

திருநக்ஷத்ரம். கொண்டாட்டம் ப்ராயேண ஶிஷ்யர்களுடைய

பக்தியின் பரீவாஹமாக ஜ்ஞாநபலத்தை உத்தேசித்து நடத்தப்படுகின்றது என்பது உண்மையே. ஆனால், ஸ்ரீதேஶிகன் அநுக்ரஹித்திருக்கிறபடி, ஆசார்யர்களுடைய அநுஸந்தாநம், நமக்கு ஸஹஜமாக நேரக்கூடிய ஸ்காலித்யங்களுக்கு ப்ராயச்சித்தமாக இருந்துகொண்டு நைமித்திகமாக இருக்கின்றதென்றும், செய்யாவிட்டால் ப்ரத்யவாயாவஹமாயிருக்கின்றதென்றும், ஆகையால் அது நித்யகர்மங்களுள் ஒன்றாகச் சேர்கின்றதென்றும் நாம் அறியவேண்டும். இம்மாதிரியான கொண்டாட்டம் ஶிஷ்யர்களென்று சொல்லக்கூடிய ஆஸ்திகர்களெல்லாராலும் தங்கள் தங்கள் ஆசார்யர்களை உத்தேஶித்து ப்ரதிவர்ஷமும் நடத்தப்பட வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

189229

[186-ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

4

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

இந்த ஸபையானது இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் அமையப் பெற்றிருக்கிறது. இங்கே அநுதினமும் நடக்கும் ஸ்ரீஸஹஸ்ரநாம பாராயணத்துக்குப் போதுமான விளக்கு வெளிச்சம் இல்லாததை உத்தேசித்து, ஷை ஸபையார் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் விஜ்ஞாபித்துக் கொண்டனர். அதன் பேரில் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் உகந்து ஸ்ரீ மடத்துக்கு எலெக்ட்ரிக் விளக்குப் போட ரூ. 250/- அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. லைட் போடுவதற்குரிய ஏற்பாடும் செய்யப்பட்டு வருகிறது. தவிர: ஷை ஸபையைச் சார்ந்த புஸ்தகாலயத்திற்குப் புதுக்கோட்டை ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ. உ. ப. காளி ரங்காசார்ய ஸ்வாமி சில புஸ்தகங்களை அநுக்ரஹித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நரஸிம்ஹாசாரியர்,
(காரியதர்சி.)

5

அணு குண்டு பரீக்ஷை.

அமரிகா தேசத்து ராஜாங்கத்தாருடை முயற்சியால், 1-7-46 திங்கள் காலையில் நடு ஸமுத்ரெத்தில் ஜநமிராத ஒரு த்வீபத்தின் ஸமீபத்தில் ஓர் அணுகுண்டு பரீக்ஷை நடந்தது, இந்தப் பரீக்ஷை பூலோகத்தின் ஆத்யந்திக விநாசத்திற்கு ஹேதுவாகுமென்று அநேக ஜநங்கள் பயந்துகொண்டிருந்தார்கள். பகவத் ஸங்கல்பத்தால், அந்தக் குண்டைப் போடுவதில் ஸ்வல்ப கால வ்யத்யாஸம் நேரிடவே, அந்தக் குண்டு ஆகாயத்திலேயே வெடித்து விட்டதாம். ஆகையால் பூமியில் அதிகச் சேதம் ஸம்பவிக்கவில்லை யென்று வ்ருத்தாந்த பத்ரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. மறுபடியும் ஒரு பரீக்ஷை நடத்தப் போவதாகவும், அப்பொழுது அந்தக் குண்டு ஸமுத்ரத்தில் வெடிக்குமாறு ஸம்விதானம் செய்யப்பட்டு வருவதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அப்படி ஸமுத்ரத்தில் அது வெடித்தால், ஸமுத்ரம் முழுவதும் க்ஷோபத்தை அடையுமென்றும், பெருத்த அலைகள் உண்டாகி அநேக த்வீபங்களைப் பாழாக்கி விடுமென்றும் அதன் வீர்யத்தை அறிந்தவர்கள் பயப்பட்டு வருகிறார்களாம். ஏன் இப்படி ஸாவத்யமான கார்யத்தைச் செய்ய வேண்டும்? விநாசகாலத்தில் புத்தி விபரீதமாகவர்த்திக்கு மன்றோ? அப்படிப்பட்ட விநாசமே என்றும் நேராமல் பகவான் அநுக்ரஹிக்க வேணும்.

இப்படிக்கு, ஒரு பீரு

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை,	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளீ (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12—0	1—0—0
3. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0–12—0
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0–12—0
6. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

"மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

5-நெ. ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை."

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.